# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9,* No.*8, பாரதியார் 2 வது தெரு,* S.S. *காலனி மதுரை – 10.* Ph. 0452 – 4354302

## சபை எடுத்துக் கொள்ளப்படுதல்

**முன்னுரை :**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகிற்கு மறுபடியும் வருவதற்கு முன்னதாக நடக்கவேண்டிய காரியங்களை வேதாகமம் நமக்கு தெளிவாகப் போதிக்கிறது. சபை எடுத்துக்கொள்ளப்படுதலின் நிகழ்ச்சியை வேதாகம ஆசிரியர்களும், மாணவர்களும் பலகாலமாக குறிப்பிட்டு வருகின்றனர். இந்தப் பாடத்தின் நோக்கம் என்னவென்றால், 'சபை' மற்றும் 'எடுத்துக்கொள்ளப்படுதல்' என்ற இரு வார்த்தைகளை வரையறுத்து அதன் மூலமாக இந்த யுகத்தில் அந்திக்கிறிஸ்து எழும்புதல், மகா உபத்திரவக்காலம் மற்றும் இயேசுகிறிஸ்து வல்லமையோடும் மகிமையோடும் இந்த உலகத்தை ஆட்சிசெய்தல் போன்ற காரியங்கள் நடைபெறும் முன்பாக சபையானது உருவாக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுதல் என்ற தேவனுடைய பெரிதான திட்டத்தையும், நோக்கத்தையும் விளக்குவதாகும்.

### இப்பாடத்தின் முக்கியத்துவம் :

இப்பாடத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூற அவசியம் இல்லை. 2 தீமோத்தேயு 2:15, 'சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதித்து' என்று கூறுகிறது. சபை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளால் முற்றிலும் அறியப்படாத ஒன்று என்பதையும் (எபேசியர் 3:5, 1 பேதுரு 1:10–12), இஸ்ரவேலுக்கும் அதைப்பற்றிய தேவனுடைய திட்டத்திற்கும் நீங்கலாக முற்றிலும் வேறுபட்டது என்பதையும் (1 கொரிந்தியர் 10:32, ரோமர் 11:25–27) நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

சபை என்பது இந்த கிருபையின் காலத்திற்குரிய தனித்தன்மை உடைய ஒன்று என்பதை காணத் தவறுவது தேவனுடைய தீர்க்கதரிசன நிகழ்ச்சிகள், இக்காலத்தைப் பற்றிய அவரது திட்டம், இவற்றை நாம் உணர்ந்துகொள்ளத் தவறுவதே ஆகும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாலும், சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதாலும் மறுபடியும் பிறந்த யூதர், புறஜாதியார் ஆகிய விசுவாசிகளினால் ஆனதே இன்று திருச்சபையாக அமைக்கப்பட்டு வருகிறது. இந்த 'சபை' முழுமை பெறும்போது, என்றென்றும் கர்த்தருடன் இருக்கும்படி பூமியினின்று அது 'எடுத்துக்கொள்ளப்படும்'. இதுவே திருச்சபையின் நம்பிக்கை. இந்நம்பிக்கை விரைவில் நிறைவேறப் போகிறது. ஏனெனில் இந்நிகழ்ச்சி எந்த நிமிஷத்திலும் ஏற்படலாம்.

**பாடம்**

## I. சபை என்றால் என்ன? இன்றைய உலகில் தேவன் என்ன கிரியை செய்து கொண்டிருக்கிறார்?

அ. சபை என்பதைக் குறிக்கும் பதம் கிரேக்க மொழியில் எக்லீசியா (Ekklesia) என்பதாகும். இதற்கு அழைக்கப்பட்டவர்கள் என்பது பொருளாகும். பொதுவாக இந்த வார்த்தை நகர சபை அல்லது பொது சபையைக் கூட்டுவது என்பதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. சபை என்ற வார்த்தையைப் பொறுத்தமட்டில் இது அழைக்கப்பட்டவர்கள் என்கிற அர்த்தத்தைக் கொடுக்கிறது. இந்தக் காலங்களில் யூதர்கள் மற்றும் புறஜாதிகளிலிருந்து விசுவாசிகள் (எபேசியர் 2:16; 3:6) இந்த உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இணைக்கப்பட்டுள்ளனர் (எபேசியர் 4:4, ரோமர் 8:28).

ஆ. சபை "கிறிஸ்துவின் சரீரம்" என்று அழைக்கப்படுகிறது (எபேசியர் 1:22,23; 2:16; 3:3–6).

இ. சபையானது "கிறிஸ்துவின் மணவாட்டியாக" வெளிப்படுத்தப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டும் இருக்கிறது (எபேசியர் 5:23, 30–32).

ஈ. இப்பொழுது தேவன் என்ன செய்து கொண்டிருக்கிறார்? அப்போஸ்தலர் 15:14–17 வரை வாசிக்கவும். இது ஒரு முக்கியமான தீர்க்கதரிசனப் பகுதியாகும்.

தேவன் புறஜாதிகளை சந்தித்து, தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தை அவர்களினின்று தெரிந்தெடுக்கிறார். இதுவே கிறிஸ்துவின் சரீரமும், மணவாட்டியுமான சபை என்பதை இங்கு கவனிக்கவும்.

கிறிஸ்துவின் சரீரத்தோடு சேர்க்கப்படவேண்டிய கடைசி ஆத்துமா இரட்சிக்கப்பட்டு முற்றுப்பெறும் போது என்ன நடக்கிறது? "நான் இதற்குப் பின்பு திரும்பி வந்து விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து" என்பதை கவனிக்க. சபை முழுமைப் பெற்றபின் இஸ்ரவேலை திரும்பி நிலைப்படுத்தி, "தாவீதினுடைய நீதியுள்ள கிளையாகிய" (எரேமியா 23:3–6) தமது சிங்காசனத்தை தோற்றுவிக்க கிறிஸ்து திரும்ப வருகிறார்.

ரோமர் 11:25–27 வரை கவனமாக பார்க்கவும். இங்கே ''புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும்'' என்பது ''புறஜாதிகளின் மத்தியிலே ஆண்டவருடைய கிரியை முடியும்வரைக்கும்'' என்பதைக் குறிக்கிறது. அதன் பின்னரே இஸ்ரவேலை மீட்பவர் வருவார்.

## II. இயேசுகிறிஸ்துவின் வருகையைக் குறித்துக் கூறும்போது பல பிரிவு மக்களும் பலவிதமான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள்.

அ. யூத மக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் (அவர்களின் மேசியா) வருகை என்பது அவர் பாலஸ்தீனத்தை மீட்டு சமாதானத்தைக் கட்டளையிடுவார் என்பதாகும் (உபாகமம் 30:2–9).

ஆ. பூமியிலுள்ள மக்களுக்கு இயேசுவின் வருகை என்பது, இயற்கைக்கு அப்பாற்பட்ட மனிதன் தோன்றி உலகில் ஒழுங்கையும், நியாயத்தையும், சமாதானத்தையும் அளிக்கவேண்டும் (சகரியா 14:9) என்பதாகும்.

இ. சபைக்கு கிறிஸ்துவின் வருகை என்பது எப்பொழுதும் பரலோகத்தின் நம்பிக்கையும், மகிமையின் நம்பிக்கையுமாகும் (கொலோசெயர் 1:27). பாலஸ்தீன நாட்டு விடுதலையையோ அல்லது பூமியில் ஆண்டவரின் ஆட்சி அல்லது ஆளுகையையோ சபை எதிர்பார்த்து இருக்கவில்லை. ஆனால் மகிமையான இரகசிய வருகையை அதாவது நாம் எடுத்துக்கொள்ளப்பட்டு வானத்தில் சந்திப்பதையே நோக்குகிறது (1 தெசலோனிக்கேயர் 4:15–17).

## III. சபை எடுத்துக்கொள்ளப்படுதல் என்பதின் அர்த்தம் :

அ. இலத்தீன் மொழியில் புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டபோது 1 தெசலோனிக்கேயர் 4:17–ல் ''எடுத்துக் கொள்ளப்படுதல்'' என்ற பதம் 'RAPERE' என்று எழுதப்பட்டுள்ளது. இதற்கு ''பறிக்கப்படுதல்'' என்பது கருத்தாகும்.

ஆ. இலத்தீன் பதமான 'RAPERE' என்பதிலிருந்து 'RAPTURE' என்ற ஆங்கிலப் பதம் வந்துள்ளது. இதுவரை பல ஆண்டுகளாக வேத ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சியைப் 'பிடிக்கப்படுதல்' அல்லது கர்த்தருடன் இருக்கும்படி ''பறித்துக்கொண்டு போகுதல்'' என்பதாகவே 'The Rapture' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

## IV. சபை எடுத்துக்கொள்ளப்படுதலை வெளிப்படுத்தும் சில வேத வசனங்கள் :

**1. யோவான் 14:1–3**

அ. இங்கே ஆண்டவருடன் வானசேனைகள் இருப்பதில்லை. அவர் மாத்திரமே தனியாக தன்னுடைய மணவாட்டியான சபைக்காக வருவார்.

ஆ. அழிவுச்சக்திகளுக்குரிய இறுதிப் போராட்டமாகிய 'அர்மகெதோன்' ஏதும் இங்கு இல்லை. கிறிஸ்து நம்மைத் தம்மிடம் சேர்த்துக் கொள்வதற்காகவே வருகிறார்.

இ. வெளி.19:11–15–ல் உள்ள பகுதிகளைப் படித்து இந்த இரு நிகழ்ச்சிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை கவனிக்கவும்.

**2. 1 தெசலோனிக்கேயர் 4:15–17**

அ. இந்தப் பகுதியில் இயேசுகிறிஸ்து பூமிக்கு வருவதில்லை. மேகங்கள்மேல் வருகிறார்.

ஆ. இங்கே இயேசுகிறிஸ்து நமக்காக வருகிறார். நம்மோடு வருவதில்லை.

இ. மேலும் நாம் பரலோகத்துக்கு எழுந்து போகிறோம். நாம் பூமிக்கு வருவதில்லை.

**3. 2 தெசலோனிக்கேயர் 2:1–8**

அ. இந்தப் பகுதி முழுவதும் ''நாம் அனைவரும் அவரிடத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவதையே'' சார்ந்திருக்கிறது.

ஆ. பாவமனுஷனும், கேட்டின்மகனுமான அந்திக்கிறிஸ்து வெளிப்படும் முன், இந்தச் சபை எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சி நடைபெற்றுவிடும் என்பதை இப்பகுதி தெளிவாகக் காட்டுகிறது.

## V. இவைகள் எப்போது நிகழும்?

**1. இயேசுகிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படுவதற்கு முன்னதாக : (2 கொரிந்தியர் 5:10)**

அ. இந்த நியாயத்தீர்ப்பு இயேசுகிறிஸ்து பூமிக்கு வருவதற்கு முன்னதாக பரலோகத்தில் நடக்கும்.

ஆ. இந்த நியாயத்தீர்ப்பு இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்குப் பின்னர் நடக்கும் என்றோ அல்லது அதனோடு தொடர்புபடுத்தியோ குறிப்பிடப்படவில்லை.

இ. பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு எப்படி பாவிகளுக்கு மாத்திரமோ, அதுபோல் இந்த நியாயத்தீர்ப்பு கிறிஸ்துவினுடையவர்களுக்கு மாத்திரமே.

ஈ. எனவே இந்தச் சம்பவங்கள் சபை எடுத்துக்கொள்ளப்படுவதற்கும், இயேசுகிறிஸ்து பூமிக்கு வருவதற்கும் (இரண்டாவது வருகைக்கும்) இடையே நடக்கும்.

**2. கர்த்தருடைய நாளுக்கு முன் :**

அ. பாடனுபவிக்கின்ற கிறிஸ்தவர்கள் சபை எடுத்துக்கொள்ளபடுதலில் கைவிடப்பட்டு, கர்த்தருடைய நாளின் பயங்கரத்தில் இல்லை என்பதை உறுதிப்படுத்தவே 2 தெசலோனிக்கேயர் எழுதப்பட்டது **(2:1–8–ஐ** வாசிக்கவும்).

**குறிப்பு :**

இங்கு இரண்டாவது வசனத்தில் உள்ள 'கிறிஸ்துவினுடைய நாள்' என்கிற வார்த்தை 'கர்த்தருடைய நாள்' என்று குறிப்பிடப்பட வேண்டும் (இவ்வசனத்தை New International Version–ல் காண்க).

ஆ. கர்த்தருடைய நாளுக்கு முன்னதாக இரண்டு காரியங்கள் கட்டாயம் நடக்கவேண்டும் என்று வசனம் 3 நமக்குப் போதிக்கிறது.

i) மோசம் போகுதல் அல்லது விசுவாச துரோகம்

ii) கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட வேண்டும்.

***குறிப்பு :***

அந்திக்கிறிஸ்து தோன்றுவதற்கு முன்னதாக சபை எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கும்.

இ. யோவேல் 1:15, 'கர்த்தருடைய நாள்' சர்வ வல்லவரிடத்திலிருந்து வருகிற சங்கார நாள் என்று குறிப்பிடப்படுகிறது. இது சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு தேவன் தனிப்பட்ட முறையில் நேரடியாக ஒவ்வொரு மனிதனிலும், நாடுகளிலும் ஈடுபடுகிற நாள்.

ஈ. வேதாகமத்தை கவனித்து வாசிக்கும் ஒவ்வொரு மாணவனும் கர்த்தரின் நாளுக்கும், சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்கும் (கிறிஸ்துவின் நாளுக்கும்) உள்ள வித்தியாசத்தை உணர்ந்துகொள்ள வேண்டும் (1 கொரிந்தியர் 1:8, பிலிப்பியர் 1:5,11, 2:14).

**3. பரிசுத்த ஆவியானவர் திரும்ப எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக : (2 தெசலோனிக்கேயர் 2:6,7)**

***குறிப்பு :***

விசுவாசியினுடைய சரீரமானது பரிசுத்த ஆவியானவர் தங்கியுள்ள ஆலயமாய் இருக்கிறது (1 கொரிந்தியர் 6:19). விசுவாசி எடுத்துக்கொள்ளப்படும் போது, பரிசுத்த ஆவியானவரும் எடுத்துக்கொள்ளப்படுகிறார்.

அ. வசனம் 3 மற்றும் 7,8–ல் திரும்பத்திரும்ப வரும் காரியங்களை ஒப்பிட்டுப் பார்ப்போம். வசனம் 3–ல் எடுத்துக் கொள்ளப்படுதல் நடக்கும்போது கேட்டின்மகனாகிய பாவமனுஷன் வெளிப்படுவான் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. வசனம் 7 மற்றும் 8–ல் பரிசுத்த ஆவியானவர் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு (தடை செய்கிறவன் நீக்கப்படும் முன்னே அது வெளிப்படாது) கேட்டின்மகன் வெளிப்படுவான் என்று குறிப்பிட்டுள்ளது.

***குறிப்பு :***

இதிலிருந்து அந்திக்கிறிஸ்து "சபை எடுத்துக்கொள்ளப்படுதல்" நடக்கும் வரை வெளிப்படமாட்டான் என்று தெரிந்து கொள்ளலாம்.

**4. மகா உபத்திரவகாலத்துக்கும், கோபாக்கினை நாளுக்கும் முன்னதாக :**

அ. வேதாகமம் உலகமெங்கும் மகா உபத்திரவகாலம் வரும் என்று கூறுகிறது (மத்தேயு 24:21,22; எரேமியா 30:7; தானியேல் 12:1).

ஆ. இது கோபாக்கினை நாளோடு ஒத்துப்போகிறது (வெளி.6:17, 5:1, 16:1).

இ. உபத்திரவ காலத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பும், கோபாக்கினையும் இருக்கும். ஆனால் விசுவாசி கோபாக்கினைக்கென்று நியமிக்கப்படவில்லை (1 தெசலோனிக்கேயர் 5:9). மேலும் கோபாக்கினையிலிருந்து விசுவாசி இரட்சிக்கப்பட்டிருக்கிறான் (ரோமர் 5:9). இனிவரும் கோபாக்கினையினின்று இப்போது நாம் (விசுவாசிகள்) நீங்கலாக்கி இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (1 தெசலோனிக்கேயர் 1:10).

**குறிப்பு :**

வெளி.7:9–15 வசனங்களில் உபத்திரவ காலங்களில் காணப்படும் பரிசுத்தவான்கள் சபையைச் சேர்ந்த மக்கள் அல்ல. இவர்கள் ஒருபோதும் கிறிஸ்துவின் நற்செய்தியினை கேள்விப்பட்டிராத இலட்சக்கணக்கான மக்களுக்குள் இருந்து 1,44,000 பேர் ஆவியினால் நிறைந்த பிரசங்கிகளின் பிரசங்கத்தினால் இரட்சிக்கப்பட்ட மக்கள் (வெளி.7:1–4).

## VI. சபை எடுத்துக்கொள்ளப்படுவதற்கும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்கும் (பூமிக்கு வருவதற்கும்) உள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் :

| *சபை எடுத்துக்கொள்ளப்படும்போது கிறிஸ்து* | *இரண்டாம் வருகையின்போது கிறிஸ்து* |
|---|---|
| 1. வானத்தில் வருகிறார் | 1. பூமிக்கு வருகிறார் |
| 2. நமக்காக (விசுவாசிகளுக்காக வருகிறார்) | 2. நம்முடன் வருகிறார் |
| 3. ஆசீர்வதிக்க வருகிறார் | 3. நியாயம் தீர்க்கவும், போரிடவும் வருகிறார் |
| 4. மேகங்கள் மீது வருகிறார் | 4. ஒலிவமலை மீது வருகிறார் |
| 5. உலகத்தை நியாயந்தீர்ப்பது இல்லை | 5. உலகத்தை நியாயந்தீர்ப்பார் |
| 6. பரிசுத்தவான்களை பரலோகத்திற்கு கொண்டு செவல்கிறார் | 6. பரிசுத்தவான்களை பூமிக்கு கொண்டு வருகிறார் |
| 7. எந்த நிமிடத்திலும் நிச்சயமாக வருகிறார் | 7. பல அடையாளங்கள் மத்தியில் வருகிறார் |
| 8. இரகசியமாக வருகிறார் | 8. வெளியரங்கமாக வருகிறார், எல்லா கண்களும் அவரைப் பார்க்கும் |
| 9. சாத்தானைக் கட்டுவதில்லை | 9. சாத்தானைக் கட்டி பாதாளத்தில் போடுகிறார் |
| 10. சபைக்கு மாத்திரம் வருகிறார் | 10. உலகத்தை ஆசீர்வதிக்க வருகிறார் |
| 11. சேனைகள் இல்லாமல் வருகிறார் | 11. பரலோகத்தின் சேனைகளோடு கூட வருகிறார் |
| 12. நம்முடைய இரட்சிப்பு நிறைவேறும்படி வருகிறார் | 12. தாவீதுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறும்படியாக வருகிறார் |

**குறிப்பு :**

மேலே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் இருக்கும் இடங்களின் விவரம் தரப்படவில்லை. நீங்களே அதை வேதாகமத்தில் தேடி கற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காகவே வேதக்குறிப்புகள் தரப்படவில்லை.

## VII. இந்நிகழ்ச்சியைப் பற்றி நமது மனநிலை எவ்வாறு இருக்க வேண்டும்?

அ. நாம் கிறிஸ்துவை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வலியுறுத்தப்படுகிறோம் (பிலிப்பியர் 3:20; எபிரெயர் 9:28; தீத்து 2:13). மகிழ்ச்சியான எதிர்நோக்கத்தில் ஏக்கத்துடன் நீண்ட எதிர்பார்த்தலாகும் இது.

ஆ. கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருக்க வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 1:10). அவருக்காக எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருக்க வேண்டும் என்பதின் உள்ளான அர்த்தம் என்னவென்றால், அவர் எந்த நேரமும் வரக்கூடும்.

இ. நாம் விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்க வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 5:6). மதில்மேல் உள்ள காவல்காரனைப்போல (ஜாமக்காரனைப்போல) விசுவாசிகள் கிறிஸ்துவின் வருகையின் நாளுக்கு விழிப்பாயிருக்க வேண்டும். அவர்கள் தெளிந்தவர்களாக, தீவிரமாக அமைதியோடு அவர் வருகைக்காக விழித்திருக்க வேண்டும்.

ஈ. கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலை நாம் விரும்ப வேண்டும் (2 தீமோத்தேயு 4:7). இயேசுகிறிஸ்துவின் பிரசன்ன மாகுதலை விரும்புகிறவர்களுக்கும், அதை ஆவலோடு எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது.

**குறிப்பு :**

வெளி.22:20 – ‘‘கர்த்தராகிய இயேசுவே வாரும்’’ என்று யோவான் விளம்புவதில் என்ன வியப்பு இருக்கிறது!

## VIII. சபை எடுத்துக்கொள்ளப்படும்போது சம்பவிக்கும் காரியங்கள் :

அ. கிறிஸ்து தன்னுடைய சர்வ வல்லமையினால்

- பாதாளத்தை ஜெயிப்பார் (1 கொரிந்தியர் 15:55–57).
- சிதைவடைதல் விதிக்கு மாறாக நடக்கும் (1 கொரிந்தியர் 15:53).
- புவிஈர்ப்பு விதி விலக்கப்படுகிறது (1 தெசலோனிக்கேயர் 4:15–17).

ஆ. பலவீனமுள்ள, அழிவுள்ள, சாவுக்கேதுவான, கனவீனமுள்ள நம்முடைய சரீரமானது இமைப்பொழுதினில் மறுரூபமாக்கப்பட்டு பலமுள்ள, அழிவில்லாத, ஆவிக்குரிய சரீரமாக மகிமையுள்ளதாக்கப்படும் (1 கொரிந்தியர் 15:42–54; பிலிப்பியர் 3:21).

இ. கிறிஸ்துவை முகமுகமாய் கண்டு கணப்பொழுதில் அவருக்கு ஒப்பாக மாறுவோம் (1 யோவான் 3:2; யூதா 24; பிலிப்பியர் 3:21).

ஈ. நாம் பூமியிலிருந்து மேலே சென்று மேகங்களின்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம் (1 தெசலோனிக்கேயர் 4:16,17).

உ. நாம் இயேசுகிறிஸ்துவின் மகிமையையும், பரலோகத்தின் மகிமையையும் சுதந்தரித்துக்கொள்வோம் (ரோமர் 8:17,18; 1 பேதுரு 4:13, 5:4).

## IX. இறுதி அறிவுரைகள் :

அ. இந்த மகா பெரிதான சம்பவம் விசுவாசிகளுக்கு என்ன சொல்கிறது?

1. **ஆறுதலடையுங்கள் –** (1 தெசலோனிக்கேயர் 4:18)

   "நாம் கிறிஸ்துவை காணும்போது இவையெல்லாம் தகுதியானதே" "பாதையின் பாடுகள் பாதையின் முடிவை நாம் அடையும்போது ஒன்றுமில்லை" என்றாகும்.

2. **உறுதியுடனிருங்கள் –** (எபிரெயர் 6:19; 1 கொரிந்தியர் 15:57)

   கலங்க வேண்டாம், விட்டு ஓடவேண்டாம், அலசடிப்பட வேண்டாம். உங்கள் வாழ்க்கையில் புயல்போன்ற சோதனைகள் வரும்போது இந்த நம்பிக்கையானது நங்கூரமாய் இருக்கட்டும்.

3. **விழித்திருங்கள் –** (மத்தேயு 25:13; 1 தெசலோனிக்கேயர் 5:6)

   இந்தக் காரியங்கள் நடக்கும்போது விழித்திருங்கள். ஊழியம் செய்வதற்கான வாய்ப்புகளுக்காக எதிர்நோக்கிக் கொண்டிருங்கள். "நான் வரும்வரை ஊழியம் செய்யுங்கள்" (லூக்கா 19:13).

4. **பிரித்தெடுக்கப்பட்டவர்களாக, பாவமில்லாத பரிசுத்தமான வாழ்க்கை வாழுங்கள் –** (தீத்து 2:11–13; 1 யோவான் 3:3)

   அசுத்தமான பழக்கவழக்கங்களை அப்புறப்படுத்துங்கள், அசுத்தமான தொடர்புகளை அல்லது உறவுகளை அறுத்தெறியுங்கள், உலக சிநேகத்தை ஒழித்துவிடுங்கள். இயேசுகிறிஸ்து வரும்போது நீங்கள் எதைப் பேசிக்கொண்டு, செய்துகொண்டு, எங்கிருக்கிறவர்களாக கண்டுபிடிக்கப்பட விரும்பமாட்டீர்களோ அதைப் பேசாமலும், செய்யாமலும், அங்கு போகாமலும் இருங்கள்.

ஆ. முடிவாக இந்தச் செய்தி அவிசுவாசிகளுக்கு என்ன கூறுகிறது?

1. உன் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு (ஆமோஸ் 4:12).
2. உன் பாவங்களைவிட்டு மனந்திரும்பு (லூக்கா 4:12). "நீங்கள் திரும்புங்கள், நீங்கள் ஏன் சாகவேண்டும்?" (எசேக்கியேல் 33:11).
3. இப்பொழுதே கர்த்தரைத் தேடுங்கள் (ஏசாயா 55:6).
4. உங்கள் இருதயத்தை கடினப்படுத்தாதிருங்கள் (எபிரெயர் 3:13).
   - காலம் ஓடிக்கொண்டிருக்கிறது, தவிர்க்க முடியாத மரணத்திற்கு ஆயத்தப்படு.
   - வெள்ளத்தை நினைத்துக்கொள் (ஆதியாகமம் 7–ம் அதிகாரம்).
   - புத்தியில்லாக் கன்னிகைகளை நினைத்துக்கொள் (மத்தேயு 25:1–13).
   - உதாசீனப்படுத்தின குற்றவாளிகளாக வேண்டாம். இவ்வுலகமாகிய கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கிறது, இயேசுவாகிய ஜீவபடகினுள் ஏறிக்கொள்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# சபை எடுத்துக் கொள்ளப்படுதல்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. எதிர்காலத்திற்கான தேவனின் திட்டத்தை நாம் அறிந்துகொள்ள விரும்பினால், நாம் அறிந்திருக்க வேண்டியது :
   a. புதிய ஏற்பாட்டை நன்கு அறிந்திருக்க வேண்டும்
   b. சபையைக்குறித்து வேதாகமம் போதிப்பதை அறிந்திருக்க வேண்டும்
   c. கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியை அறிந்திருக்க வேண்டும்
2. 'சபை' என்கிற வார்த்தையின் பொருள் என்ன ?
   a. மக்கள் கூடிவரும் கட்டிடம்
   b. கூடிவரும் மக்கள் கூட்டம்
   c. அழைக்கப்பட்டவர்கள்
3. புதிய ஏற்பாட்டில் சபைக்குப் பயன்படுத்தப்படும் மற்றொரு வார்த்தை என்ன ?
   a. கிறிஸ்துவின் சரீரம்
   b. அப்போஸ்தலர்களின் குழு
   c. ஆலயக்கட்டிடம்
4. கிறிஸ்துவின் வருகை யூதர்களுக்கு என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது ?
   a. தம்முடன் சபையை அழைத்து வருவார்
   b. யூதர்கள் சமாதானத்தோடே வாழ்வார்கள்
   c. சிலுவை மரணத்திற்காக வருத்தம் அடைவார்கள்
5. கிறிஸ்துவின் வருகை சபைக்கு என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது ?
   a. கிறிஸ்து சபையை இந்த உலகத்திலிருந்து எடுத்துக்கொள்வார்
   b. கிறிஸ்து இந்த உலகத்தை இருப்புக்கோலால் அரசாளுவார்
   c. கிறிஸ்து இந்த உலகமெங்கும் பிரசங்கம் செய்வார்
6. கிறிஸ்துவின் நியாயாசனம் என்பது என்ன ?
   a. அவிசுவாசிகளுக்கான நியாயத்தீர்ப்பு
   b. விசுவாசிகளுக்கான நியாயத்தீர்ப்பு
   c. உலகத்திற்கான நியாயத்தீர்ப்பு
7. பவுல் 2 தெசலோனிக்கேயர் நிருபத்தை எழுத காரணம் என்ன ?
   a. தெசலோனிக்கேயா பட்டணத்தில் உள்ள விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய பிரச்சனை இருந்ததை அறிந்து கொண்டார்
   b. தெசலோனிக்கேயா பட்டணத்தில் உபத்திரவம் இருந்ததை அறிந்து கொண்டார்
   c. தெசலோனிக்கேயா பட்டணத்தில் உள்ள விசுவாசிகள் சபை எடுத்துக்கொள்ளபடும்போது தாங்கள் விட்டு விடப்படுவதில்லை என்பதை அறிந்துகொள்ள விரும்பினார்

8. விசுவாசிகள் உபத்திரவக் காலத்திற்குள் கடந்துசெல்ல மாட்டார்கள் என்று போதிக்கும் வேத வசனம் எது ?
   a. 1 தெசலோனிக்கேயர் 1:10
   b. வெளிப்படுத்தல் 6:17
   c. 2 தெசலோனிக்கேயர் 2:10–12
9. சபை எடுத்துக் கொள்ளப்படும்பொழுது நிகழும் மூன்று காரியங்களைக் குறிக்கவும்.
   a. கிறிஸ்து மத்திய வானத்தில் தோன்றுவார்
   b. கிறிஸ்து இந்தப் பூமிக்கு வருவார்
   c. கிறிஸ்து விசுவாசிகளைத் தண்டிப்பார்
   d. கிறிஸ்து மேகங்கள் மேல் வருவார்
   e. கிறிஸ்து இரகசியமாக வருவார்
10. கிறிஸ்து வல்லமையோடும் மகிமையோடும் வரும்பொழுது நடக்கும் மூன்று காரியங்களை குறிக்கவும்.
   a. அவர் மேகங்கள் மட்டும் வருவார்
   b. அவர் விசுவாசிகளை தம்முடன் கொண்டுவருவார்
   c. சாத்தானை கட்டிப்போட மாட்டார்
   d. சபைக்காக அவர் வருவார்
   e. அனைவரும் அவரைக் காண்பார்கள்
   f. உலகத்தை நியாயந்தீர்ப்பார்
11. கிறிஸ்துவின் வருகை எந்த நேரத்திலும் நடக்கலாம், எனவே ஒரு விசுவாசி எவ்விதம் வாழ வேண்டும் ?
   a. அவர் விரும்பியபடி வாழலாம்
   b. ஒவ்வொரு நாளும் அவரை எதிர்பார்த்து வாழ வேண்டும்
   c. ஒவ்வொரு நாளும் ஆலயத்திற்குச் சென்று அவருக்காகக் காத்திருக்க வேண்டும்
12. கிறிஸ்து சபையை எடுத்துக்கொள்ளும்பொழுது என்ன நிகழும் ?
   a. அனைத்து விசுவாசிகளும் அவரைப் பார்க்கப் பயப்படுவார்கள்
   b. மரித்த விசுவாசிகள் முதலாவது உயிரோடு எழுந்திருப்பார்கள், உயிருள்ள விசுவாசிகள் மறுரூபமடைவார்கள்
   c. கிறிஸ்துவின் சேனை அவரின் விரோதிகள் அனைவரையும் தோற்கடிக்கும்
13. கிறிஸ்துவின் வருகையைக் குறித்து அறிந்த ஒரு அவிசுவாசி என்ன செய்ய வேண்டும் ?
   a. முடிந்தவரை சபைக்குச் செல்ல வேண்டும்
   b. முடிந்தவரை பிறர்க்கு நன்மைகளைச் செய்ய வேண்டும்
   c. கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும்
14. கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை முன்னிட்டு விசுவாசிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும் என்ன வற்புறுத்தி கூறுவாய் ?

   **விசுவாசிகளுக்கு :**

   a. ----------------------------------------------------------------------------------------
   b. ----------------------------------------------------------------------------------------
   c. ----------------------------------------------------------------------------------------

d. -----------------------------------------------------------------------

**அவிசுவாசிகளுக்கு :**

a. -----------------------------------------------------------------------

b. -----------------------------------------------------------------------

c. -----------------------------------------------------------------------

d. -----------------------------------------------------------------------

15. 1 தெசலோனிக்கேயர் 4:15–17 வசனங்களின்படி, கிறிஸ்து வரும் பொழுது சபைக்கு என்ன நிகழும் ?

-----------------------------------------------------------------------

16. 2 தெசலோனிக்கேயர் 2:3–ன்படி, கர்த்தருடைய நாளுக்கு முன் எந்த இரண்டு சம்பவங்கள் நடக்க வேண்டும் ?

1. -----------------------------------------------------------------------

2. -----------------------------------------------------------------------

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________